RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 139 | மே.25, 2025 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5



## பெரும்பிடுகு முத்தரையருக்கு அஞ்சல் தலை: மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் தகவல்

திருச்சி: மே.25-

பெரும்பிடுகு முத்தரையரின் 1,350வது சதயவிழாவை முன்னிட்டு திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகில் உள்ள பெரும்பிடுகு முத்தரையர் மணி மண்டபத்தில் உள்ள சிலைக்கு நேற்று பாஜக சார்பில் மகாராஷ்டிரா ஆளுநர் சி.பி.ராதாகிருஷ்ணன், மத்திய அமைச்சர் எல்.முருகன், மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

பின்னர், மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் செய்தியாளர்களிடம் கூறியது: தமிழகத்தில் அனைத்து தலைவர்களையும் போற்றும் கட்சியாக பாஜக உள்ளது. 75வது சுதந்திர தினம் கொண்டாடும் போதே இந்தியா முழுவதும் மறைக்கப்பட்ட அனைத்து தலைவர்களின் வரலாறுகளை ஆவணப்படுத்துவது, அனைத்து தலைவர்களின் புகழ், நாட்டுக்கு ஆற்றிய சேவைகளை மக்களுக்கு எடுத்துச் செல்லும் பணிகளை பிரதமர் மோடி தொடர்ந்து செய்து வருகிறார்.

விரைவில், தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமைக்கும். அப்போது எந்த இடத்தில் மணிமண்டபம் கட்டினால் பெரும்பிடுகு முத்தரையருக்கு பெருமை சேர்க்குமோ அந்த இடத்தில் அவருக்கு மணிமண்டபம் அமைக்கப்படும். மேலும், அடுத்த ஆண்டு பெரும்பிடுகு முத்தரையருக்கு மத்திய அரசின் சார்பில் இதே இடத்தில் தபால் தலை வெளியிடப்படும் என்றார்.

இந்நிகழ்ச்சியில், பா[க மாநில பொருளாளர் சிவசுப்பிரமணியன், திருச்சி மாநகர் மாவட்டத் தலைவர் ஒண்டிமுத்து உட்பட பலர் கலந்துகொண்டனர். நிகழ்ச்சியில் கலந்துகொண்ட தலைவர்களை தமிழர் தேசம் கட்சி நிறுவனத் தலைவர் கே.கே. செல்வகுமார் வரவேற்றார்.

முன்னதாக, பெரும்பிடுகு முத்தரையர் சிலைக்கு மாலை செலுத்தி விட்டு வெளியே வந்த அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன், பாஜக தலைவர்கள் வந்ததும் அவர்களுடன் மரியாதை நிமித்தமாக சென்றார்.



## கோவைக்கு 2 நாட்கள் ரெட் அலர்ட்: அவசரகால தொடர்பு எண்கள் அறிவிப்பு

கோவை: மே.25-

தென்மேற்கு பருவமழைக் காலம் அடுத்த சில தினங்களில் தொடங்க உள்ளது. மத்திய கிழக்கு அரபிக் கடல் பகுதிகளில் உருவான காற்றழுத்த தாழ்வுப் பகுதி, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடையும் நிலை உள்ளதால், கோவை, நீலகிரி மாவட்டங்களுக்கு அடுத்த இரு தினங்களுக்கு அதி கனமழைக்கான ரெட் அலர்ட் எச்சரிக்கை சென்னை வானிலை ஆய்வு மையத்தினரால் விடுக்கப்பட்டுள்ளது.

வழக்கமாக பருவமழைக் காலங்களில் மாநகரில் சாலையோர தாழ்வான இடங்கள், ரயில்வே சுரங்கப் பாதைகளின் கீழ் புற வழித்தடங்கள், மேம்பால கீழ் வழித்தடங்கள் உள்ளிட்ட இடங்களில் மழைநீர் தேங்கி போக்குவரத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும். தற்போது, மேற்கண்ட பகுதிகளில் மழைநீர் தேங்குவதை தடுக்கவும், தேங்கினாலும் விரைவாக நீரை வெளியேற்ற ஏதுவாக கூடுதல் மோட்டார்கள் வைக்கப்பட்டுள்ளன.

கோவை மாநகரில் மழைநீர் தேங்கும் இடங்களான மேம்பாலங்களின் கீழ் பகுதிகள், சுரங்கப்பாதைகள் உள்ளிட்ட இடங்களில் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் கிராந்திகுமார் பாடி, மாவட்ட ஆட்சியர் பவன்குமார், மாநகராட்சி ஆணையர் மா.சிவகுரு பிரபாகரன் மற்றும் அதிகாரிகள் குழுவினர் இன்று நேரில் ஆய்வு செய்தனர். மேலும், பருவமழைக் காலத்தையொட்டி, பொதுமக்கள் பாதிப்புகள் குறித்து தகவல் தெரிவிக்க மாநகராட்சி சார்பில் கட்டுப்பாட்டு அறையும் அமைக்கப்பட்டுள்ளது.

மண்டலம் வாரியாக தொடர்பு எண்களும் அறிவிக்கப்பட்டுள்ளன. அவசர கட்டுப்பாட்டு மைய எண் 04222302323, வாட்ஸ் அப் எண் : 8190000200, வடக்கு மண்டலம் 8925975980, மேற்கு மண்டலம் 89259 75981, மத்திய மண்டலம் 89259759822, தெற்கு மண்டலம் 9043066114, கிழக்கு மண்டலம் 89258 40945 ஆகிய தொடர்பு எண்களில் பொதுமக்கள் தொடர்பு கொண்டு மழை பாதிப்புகள் குறித்து தகவல் தெரிவிக்கலாம் என மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதேபோல், மாவட்டத்தில் உள்ள 7 நகராட்சிகளிலும் தொடர்பு எண்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. அதன்படி, வால்பாறை நகராட்சியை 04253222394, பொள்ளாச்சி 04259 220999, மேட்டுப்பாளையம் 04254222151, மதுக்கரை 04222511815, கூடலூர் 0422 2692402, கருமத்தம்பட்டி 04212333070, காரமடை 04254272315 ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு பொதுமக்கள் தகவல் தெரிவிக்கலாம். அதேபோல், மாவட்டத்தில் உள்ள 11 வட்டாட்சியர் அலுவலகங்களிலும் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டு அவசர கால தொடர்பு எண்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

# ஆபத்தில் சிக்கினால் உடனடியாக அவசர எண் '100'ஐ தொடர்பு கொள்ளவேண்டும்

## சென்னை மாநகர காவல் ஆணையர்

சென்னை: மே.25-

ஆபத்தில் சிக்கிக் கொண்டவர்கள், உடனடியாக 100ஐ தொடர்பு கொண்டு, காவல்துறையை அழைத்து பயன்பெறுங்கள் என காவல் ஆணையர் அருண் அறிவுறுத்தி உள்ளார்.

சென்னையில் கொலை, கொள்ளை, வழிப்பறி உள்பட அனைத்து வகையான குற்றச் செயல்களையும் முற்றிலும் தடுத்து நிறுத்த போலீஸார் பல்வேறு தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். அதன் ஒரு பகுதியாக ரோந்து பணி முடுக்கி விடப்பட்டுள்ளது. இது ஒருபுறம் ஆபத்தில் இருப்பவர்கள் அதுகுறித்த தகவல்களை அவசர அழைப்பு எண்ணான 100க்கு தொடர்பு கொண்டு உடனடியாக தெரிவித்தால் போலீஸார் சம்பவ இடம் விரைந்து உதவ, உதவியாக இருக்கும் என காவல் ஆணையர் அருண் தெரிவித்துள்ளார். மேலும், 5 முதல் 10 நிமிடங்களுக்குள் ரோந்து போலீஸார் நிகழ்விடம் வந்து உதவிக்கரம் நீட்டுவார்கள் எனவும் ஆணையர் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக மேலும், அவர் கூறுகையில், கடந்த 6ம் தேதி முகப்பேர் பகுதியைச் சேர்ந்த ஜோதி என்ற பெண், அவசர உதவி எண் 100ஐ தொடர்பு கொண்டு எனது 13 வயது மகன் செல்போன் செயலி வாயிலாக வாகனத்தை புக் செய்து சென்று விட்டார். அவர் எங்கு சென்றார் என தெரியவில்லை. அவரை உடனே மீட்டுத் தாருங்கள் என கதறி அழுதார். இதையடுத்து, போலீஸார் சம்பந்தப்பட்ட கால் டாக்ஸி ஓட்டுநரை தொடர்பு கொண்டு சிறுவனை பத்திரமாக மீட்டுக் கொடுத்தனர்.

இதேபோல், பாரிமுனையைச் சேர்ந்த கீர்த்தனா (28) என்ற பெண் கடந்த 10ம் தேதி ஓலா ஆட்டோ புக் செய்து பயணம் செய்த போது சில முக்கிய ஆவணங்களை மறதியாக ஆட்டோவில் தவற விட்டு சென்றுள்ளார். உடனே கீர்த்தனா சென்னை பெருநகர காவல் அவசர அழைப்பு உதவி எண்ணை தொடர்பு கொண்டு புகார் தெரிவித்தார். கட்டுப்பாட்டு அறை போலீசார் உடனே ஓலா ஆட்டோ ஓட்டுநரின் செல்போனில் தொடர்பு கொண்டு பயணி தவறவிட்ட ஆவணங்களை ஒப்படைக்குமாறு கூறியதின் பேரில் ஆட்டோ ஓட்டுநர் கீர்த்தனாவிடம் ஆவணங்களை பத்திரமாக ஒப்படைத்தார். இப்படி சென்னையில் பல்வேறு சம்பவங்களில் பொது மக்களின் அரணாகவும் காவல் அவசர அழைப்பு உதவி எண் செயல்பட்டுள்ளது. எனவே, ஆபத்தில் இருப்பவர்கள் உடனடியாக 100ஐ அழைத்து உதவி கோரலாம் என காவல் ஆணையர் அருண் அறிவுறுத்தி உள்ளார்.

# பஞ்சாயத்துப் பகுதிகளுக்கு உயர்த்தப்பட்ட வீட்டு, தண்ணீர் வரிகளை திரும்பப் பெறுக: இபிஎஸ்

சென்னை: மே.25-

"பஞ்சாயத்துப் பகுதிகளுக்கு வீட்டு வரி, தண்ணீர் வரிகளை அரசு உயர்த்தி இருப்பதை வன்மையாகக் கண்டிக்கிறேன். இந்த வரிகளை திரும்பப் பெற வேண்டும் என்று முதல்வர் ஸ்டாலினை வலியுறுத்துகிறேன்." என்று அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் இன்று (சனிக்கிழமை) வெளியிட்டுள்ள அறிக்கையில், "ஆட்சிக்கு வந்த 48 மாதங்களில், பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் உள்ள வீடுகள், கடைகளுக்கு இரண்டு முறைகளுக்கு மேல் சொத்து வரியை உயர்த்தியதுடன், இனி ஆண்டுதோறும் 6 சதவீத வரி உயர்வையும் அறிவித்த ஸ்டாலின் மாடல் அரசு, இந்த ஆண்டு (2025-2026) முதல் தமிழகத்தில் அனைத்து பஞ்சாயத்துகளிலும் உள்ள ஓலைக் குடிசைகள், ஓடு / ஆஸ்பெட்டாஸ் வீடுகள், கான்கிரீட் வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்கள் உள்ளிட்ட அனைத்திற்கும் சொத்து வரியை உயர்த்தியதுடன், புதிய வரியை வசூலிக்க அதிகாரிகளை வற்புறுத்தி வருகிறது.

2021ஆம் ஆண்டு மே மாதம் ஆட்சிக்கு வந்த விடியா திமுகவின் ஸ்டாலின் மாடல் ஆட்சியில், சொத்துவரி, குடிநீர் கட்டணங்கள், கழிவுநீர் அகற்றல் கட்டணம் மற்றும் மின் கட்டணங்கள் ஆண்டுதோறும் 6 சதவீதம் உயர்த்தப்படுகின்றன.

மேலும், உணவுப் பொருட்கள் மற்றும் கட்டுமானப் பொருட்களின் விலைகள் பலமடங்கு உயர்வு, பெண்களுக்கு எதிராக அதிகரித்து வரும் பாலியல் வன்கொடுமைகள், சட்டம்ஒழுங்கு சீர்கேடு, போதைப் பொருட்கள் நடமாட்டம், மணல் கொள்ளை, டாஸ்மாக் கொள்ளை என்று அனைத்துத் துறைகளிலும் கமிஷன், கரப்ஷன், கலெக்ஷன் என்று அதிகரித்து வரும் ஊழல். இதன் காரணமாக இந்தியாவிலேயே கடன் வாங்குவதில் தமிழகம் முதலிடம் பெற்றுள்ளது. இதுதான் 48 மாதகால அலங்கோல ஸ்டாலின் மாடல் தி.மு.க. ஆட்சியின் வேதனைகளை தமிழக மக்கள் அனுபவித்து வருகிறார்கள்.



இந்நிலையில், 2024-2025ஆம் ஆண்டு முதல் பஞ்சாயத்து பகுதிகளில் புதிதாக வீடு கட்டியவர்கள் மற்றும் வீடு கட்ட திட்டமிட்டுள்ளவர்கள், வீட்டின் கட்டுமானப் பரப்பை அளந்து வரி நிர்ணயம் செய்ய ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்க வேண்டும். இந்தப் புதிய சட்டத்தின்படி ஒரு சதுர அடிக்கு கட்டட வரைபடக் கட்டணமாக சுமார் 37 ரூபாய் செலுத்த வேண்டும்.

மேலும், 2024-2025ஆம் ஆண்டுவரை ஓலைக் குடிசை ஒன்றுக்கு ரூ. 44ம், ஓடு மற்றும் ஆஸ்பெஸ்டாஸ் ஷீட் வீடு ஒன்றுக்கு ரூ. 66ம், கான்கிரீட் வீடு ஒன்றுக்கு ரூ. 121ம் வீட்டு வரியாக செலுத்தி வந்தனர். மேலும், வீட்டு வரி ரசீதில் வீட்டின் பரப்பளவு குறிப்பிடப்பட்டிருக்கும்.

தற்போது, உயர்த்தப்பட்ட சொத்து வரியின்படி, 2025 -2026 முதல், இனி ஓலைக் குடிசைகளுக்கு அதிகபட்சமாக சதுர அடி ஒன்றுக்கு 40 பைசா முதல் 1 ரூபாய் வரையும், ஓட்டு வீட்டிற்கு சதுர அடி ஒன்றுக்கு 30 பைசா முதல் 60 பைசா வரையும், கான்கிரீட் வீட்டிற்கு சதுர அடி ஒன்றுக்கு 50 பைசா முதல் 1 ரூபாய் வரையும், வீட்டு வரி உயர்த்தப்பட வேண்டும் என்றும், ஏற்கெனவே உள்ள பழைய வீடுகளுக்கும் இந்த வரி உயர்வின்படி புதிய வரியை வசூலிக்க வேண்டும் என்றும் அரசு உள்ளாட்சிகளுக்கு உத்தரவு வழங்கியுள்ளது.

இதன்படி, இனி ஊராட்சிகளில் அதிகபட்சமாக 500 சதுர அடி கான்கீரிட் வீடுகளுக்கு ரூ. 500ம், ஓட்டு வீடுகளுக்கு ரூ. 300ம், ஓலை வீடுகளுக்கு ரூ. 200ம் வீட்டுவரி வசூலிக்கப்படும்.

எம்ஜிஆர் முதலமைச்சராக இருந்தபோது ஏழை, எளிய மக்கள் நலனைக் கருத்தில்கொண்டு குடிசை வீடுகளுக்கு இலவச மின்சாரத்தை வழங்கினார். ஆனால், திமுக அரசோ, ஏழை மக்களின் குடிசைகளுக்கு வரியை உயர்த்தி, அவர்களை வேதனையில் ஆழ்த்தி உள்ளது. இதுதான், இந்த ஸ்டாலின் மாடல் திமுக ஆட்சியின் சாதனை.

கடந்த 2024-2025ஆம் ஆண்டு முதல் தமிழகத்தில் அனைத்து ஊராட்சிகளிலும் உள்ள புதிய வரிவிதிப்பு ஆன்லைன் சேவையை அரசு முடக்கி வைத்துள்ளதால், புதிதாக வீடு கட்டிய மக்கள், வரி நிர்ணயத்திற்கு விண்ணப்பிக்க முடியாமல் தவிக்கின்றனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. கிராமங்களில் வரைபட அனுமதிக் கட்டணம் பல மடங்கு அதிகரிக்கப்பட்டதும் இதற்கு ஒரு காரணம் என்று கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த நான்கு ஆண்டுகளாக மக்களின் வயிற்றில் அடித்து, அலங்கோல கொடுங்கோல் ஆட்சி நடத்தி வரும் ஸ்டாலின் மாடல் அரசு, பஞ்சாயத்துப் பகுதிகளுக்கு வீட்டு வரி, தண்ணீர் வரிகளை உயர்த்தி இருப்பதை வன்மையாகக் கண்டிக்கிறேன். பஞ்சாயத்துப் பகுதிகளுக்கு உயர்த்தப்பட்ட வீட்டு வரிகளை திரும்பப் பெற வேண்டும் என்று நிர்வாகத் திறமையற்ற முதல்வர் ஸ்டாலினை வலியுறுத்துகிறேன்." என்று குறிப்பிட்டுள்ளார்.

## நீலகிரிக்கு 2 நாட்கள் ரெட் அலர்ட் உஷார் நிலையில் மாவட்ட நிர்வாகம்!

உதகை: மே.25-

நீலகிரி மாவட்டத்துக்கு அடுத்த இரு தினங்களுக்கு அதீத கனமழை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள நிலையில், மாவட்டத்தில் உள்ள 456 நிவாரண முகாம்களையும் மாவட்ட நிர்வாகம் தயார் நிலையில் வைத்துள்ளது. அனைத்து அரசுத் துறை அதிகாரிகளையும் உஷார் நிலையில் இருக்க மாவட்ட நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது.

ஆப்தமித்ரா திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற 197 பேரிடர் கால நபர்கள் தயார் நிலையில் உள்ளனர். மழைக்கால பேரிடர் குறித்து 1077 என்ற கட்டணமில்லா



தொலைபேசி எண்ணையோ, 0423 2450034 மற்றும் 2450035 ஆகிய எண்களையோ மக்கள் தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கலாம் என மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், அரக்கோணத்தில் இருந்து தேசிய பேரிடர் மீட்பு குழு ஆய்வாளர் பிரதீஸ் தலைமையில் 30 பேர் ஊட்டி வந்துள்ளனர். இவர்கள், மழை பாதிப்புகள் அதிகம் ஏற்படும் பகுதிகளாக கண்டறியப்பட்டுள்ள ஊட்டி, பந்தலூர், கூடலூர் பகுதிகளுக்கு செல்லவுள்ளனர். தேவைப்படும்பட்சத்தில் கோவையில் இருந்தும் பேரிடர் மீட்புக் குழுவினர் வரவழைக்கப்படுவர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

# கோவை, மதுரை மெட்ரோ முதல் கல்வி நிதி வரை: பிரதமர் மோடியிடம் முதல்வர் ஸ்டாலின் முன்வைத்த கோரிக்கைகள்

புதுடெல்லி: மே.25-

எஸ்எஸ்ஏ திட்டத்துக்கான நிதி விடுவிப்பு முதல் மீனவர்கள் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணுதல் வரை, தமிழகத்தின் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுவை பிரதமர் மோடியிடம் முதல்வர் ஸ்டாலின் வழங்கினார். டெல்லியில் நடைபெற்ற நிதி ஆயோக் கூட்டத்தில் கலந்து கொண்ட தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்து, தமிழ்நாட்டின் வளர்ச்சித் திட்டங்கள் குறித்த பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுவை வழங்கினார். அதன் விவரம்:

› உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்கள் கோவை, மதுரை மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு ஒப்புதல்: தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படும் கோவை நகரம், கலை பண்பாட்டிற்கு தலைநகராக விளங்கும் மதுரை ஆகிய இரு நகரங்களின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கேற்ப, செயல்திறன்மிக்க பொது போக்குவரத்து அமைப்புகளை உருவாக்குவது அவசியமாகிறது. இதன் அடிப்படையில், மெட்ரோ ரயில் திட்டத்தினை அறிமுகப்படுத்த தமிழக அரசு உத்தேசித்துள்ளது. சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் கோவை மற்றும் மதுரையில் மெட்ரோ ரயில் திட்டத்தினை செயல்படுத்துவதற்கான விரிவான திட்ட அறிக்கைகளை தயாரித்துள்ளது.

கோவை மற்றும் மதுரை மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு தமிழக அரசு ஒப்புதல் வழங்கி, 50:50 சம பங்களிப்பு அடிப்படையில் மத்திய அரசின் நிதியுதவி வேண்டி, இத்திட்டங்களை ஒருங்கிணைந்த திட்டமாக செயல்படுத்திட பரிந்துரைத்துள்ளது. கட்டி முடிப்பதற்கான மதிப்பீடப்பட்டிருக்கும் செலவினமாவது கோவைக்கு 34.8 கி.மீ.க்கு ரூ.10,740.49 கோடி மற்றும் மதுரைக்கு 32 கி.மீ.க்கு ரூ.11,368.35 கோடி ஆகும். மெட்ரோ ரயில் கொள்கை2017ன் படி, மத்திய அரசும் மற்றும் தமிழக அரசும், 50:50 சம பங்களிப்பு அடிப்படையில், இரு திட்டங்களையும் இணைந்து செயல்படுத்துவதற்கான, ஒப்புதலையும் நிதியுதவியையும், விரைவில் வழங்கிட, ஆவன செய்திட வேண்டும்.

சென்னையின் பெருந்திரள் துரித போக்குவரத்து அமைப்பினை (MRTS) சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் வசம் ஒப்படைத்தல்: சென்னை கடற்கரை முதல் வேளச்சேரி நிலையம் வரையிலான, பெருந்திரள் துரித போக்குவரத்து அமைப்பு (MRTS), தென்னக ரயில்வேயால் இயக்கப்பட்டு வருகிறது. சென்னை மக்கள், பெருந்திரள் துரித போக்குவரத்து அமைப்பின் (MRTS) சேவைகளை மெட்ரோ ரயில் தர அளவில் பெற்று பயனடையும் வகையில், இவ்வமைப்பினை மேம்படுத்தவும் மற்றும் இயக்கிடவும், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் வசம் ஒப்படைத்திட கோரும் செயற்குறிப்பினை தமிழக அரசு ரயில்வே அமைச்சகத்திடம் சமர்ப்பித்துள்ளது.எனவே, பொது நலன் கருதி, பெருந்திரள் துரித போக்குவரத்து அமைப்பினை (MRTS), சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் (CMRL) வசம் விரைவில் மாற்றுவதற்கான உரிய ஏற்பாட்டினை மேற்கொள்ள வேண்டும்.

தேசிய நெடுஞ்சாலையின் (NH32) செங்கல்பட்டு திண்டிவனம் பகுதியை ஆறு, எட்டு வழிச்சாலையாக மேம்படுத்துதல்: சென்னை முதல் கன்னியாகுமரி வரையிலான சாலையானது மாநிலத்தின் முக்கிய நகரங்களான சென்னை, திருச்சி, மதுரை மற்றும் கன்னியாகுமரி ஆகியவற்றை இணைக்கும் ஒரு முக்கியமான தேசிய நெடுஞ்சாலையாகும். இந்த தேசிய நெடுஞ்சாலையின் (NH-32) நகர்புறம் மற்றும் புறநகர்ப் பகுதிகள், பண்டிகை காலங்கள் மற்றும் பிற முக்கிய நிகழ்வுகளின் போது பெரும் போக்குவரத்து நெரிசலை எதிர்கொள்கின்றன. ஏற்கனவே நான்கு வழிச்சாலையின் அதிகபட்ச கொள்ளளவான 60,000 வாகன அலகை தாண்டிவிட்டதால், இந்த தேசிய நெடுஞ்சாலைப் பகுதிகளை உடனடியாக ஆறு அல்லது எட்டு வழிச்சாலையாக அகலப்படுத்திட வேண்டியுள்ளது.

அதிக விபத்து நிகழும் பகுதிகளை கொண்டுள்ள இந்த செங்கல்பட்டு திண்டிவனம் பகுதி தேசிய நெடுஞ் சாலை ழிபி32 ல் உடனடி கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இந்த சாலைப் பகுதியை எட்டு வழிப்பாதையாக மாற்றுவது சாலை விபத்துக்கள், உயிரிழப்புகளைக் குறைக்க வழிவகுக்கும். இச்சாலையை விரிவாக்கம் செய்வதற்கான விரிவான திட்ட அறிக்கை இந்திய தேசிய நெடுஞ் சாலைகள் ஆணையத்தால் தயாரிக்கப்பட்டு வருகிறது. எனவே, செங்கல்பட்டு ஸ்ரீ திண்டிவனம் வரையிலான தேசிய நெடுஞ் சாலைப் பகுதியை ஆறு, எட்டு வழிச்சாலையாக மேம்படுத்துவதற்கு விரைவில் ஒப்புதல் அளிக்க வேண்டும்.

கோவை மற்றும் மதுரை விமான நிலையங்கள் விரிவாக்கம்: கோவை பன்னாட்டு விமான நிலையத்தின் விரிவாக்கத்திற்காக 637.49 ஏக்கர் நிலங்கள் தேவைப்படுகிறது. இதுவரை, 601.48 ஏக்கர் நிலங்கள் இந்திய விமான நிலைய ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்திய விமான நிலைய ஆணையம் விமான நிலைய விரிவாக்கப் பணிகளை இன்னும் தொடங்கவில்லை. விமான நிலைய விரிவாக்கத்திற்கான பெருந்திட்டத்தை இந்திய விமான நிலைய ஆணையம் விரைந்து முடித்து மாநில அரசுக்கு வழங்க வேண்டும்.



மத்திய விமான போக்குவரத்து அமைச்சகம் விமான போக்குவரத்து சந்தை தேவைகளை கருத்தில் கொண்டு, கிழக்கு மற்றும் தூர கிழக்கு நாடுகளிருந்து விமான நிறுவனங்களின் சேவைகளை இவ்விமான நிலையத்திலிருந்து தற்போதைய வசதிகளுடன் அதிகளவில் செயல்பட அனுமதிக்க வேண்டும். கோவை விமான நிலையத்தில் போதுமான வசதிகள் இல்லை. எனவே பிரத்தியேகமான பன்னாட்டு சரக்குகளை கையாளும் விமான சேவைகளை இவ்விமான நிலையத்தில் தொடங்குவது மிகவும் அவசியமாகும்.

மதுரை விமான நிலைய விரிவாக்கத்திற்கு 633.23 ஏக்கர் நிலங்கள் தேவைப்படுகிறது. இதில், 521.56 ஏக்கர் நிலங்கள் இந்திய விமான நிலைய ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மதுரை விமான நிலையத்தினை பன்னாட்டு விமான நிலையமாக அறிவிக்க வேண்டும் என மாநில அரசு மத்திய அரசிடம் கோரியுள்ளது. கோவை மற்றும் மதுரை விமான நிலையங்களின் விரிவாக்கப் பணிகளை விரைவுபடுத்த வேண்டும்.

கோவையில் புதிய எய்ம்ஸ் மருத்துவமனைக்கான கோரிக்கை: மதுரையில் புதிய எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் மேற்கு பகுதியில், கோவையில், ஒரு புதிய எய்ம்ஸ் மருத்துவமனையை அமைக்கும் பட்சத்தில், இப்பகுதியில் வாழும் மக்களுக்கு பேருதவியாக அமையும்.

எனவே, கோவையில் ஒரு புதிய எய்ம்ஸ் மருத்துவமனைக்கு அனுமதி வழங்கிட வேண்டும். கோவையில் இரண்டாவது எய்ம்ஸ் மருத்துவமனை அமைய தேவையான நிலம் தமிழக அரசு வழங்க தயாராக உள்ளது.

› சமக்ர சிக்ஷா திட்டத்திற்கான நிதி விடுவிப்பு: 2024ஸ்ரீ25 நிதியாண்டிற்கான சமக்ர சிக்ஷா திட்டத்துக்கான மத்திய அரசு திட்ட ஏற்பளிப்புக் குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்ட நிதி தமிழக அரசுக்கு இதுவரை விடுவிக்கப்படவில்லை. இதனால் பள்ளிக் கல்வித் துறையின் மிக முக்கியமான செயல்பாடுகளான இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமைச் சட்டத்தின் கீழ் ஈட்டளிப்புகள் வழங்குதல் மற்றும் ஆசிரியர் ஊதியம் வழங்குதல் ஆகியவற்றினை நடைமுறைப்படுத்துவதின் மீது எதிர்மறையான தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது.

202-25ஆம் ஆண்டுக்கான ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடு ரூ.4305.66 கோடியாகும். இதில் மத்திய அரசின் 60% பங்காக ரூ.2151.59 கோடி வழங்கப்பட வேண்டிய நிலையில், இது நாள் வரை அத்தொகை விடுவிக்கப்படவில்லை. 2025-26ஆம் ஆண்டுக்காக, திட்ட ஏற்பளிப்புக் குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள ரூ. 2733.57 கோடி நிதி ஒதுக்கீட்டில் மத்திய அரசின் 60% பங்கு தொகையான ரூ.1640.14 கோடி வழங்கப்பட வேண்டியுள்ளது. இதற்கான முதல் தவணை நிதி விடுவிப்புக்கான கோரிக்கை மத்திய அரசுக்கு ஏற்கெனவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிதி விடுவிக்காமைக்கான காரணமாக பிஎம் ஸ்ரீ திட்டத்தின் கீழ் மாநிலங்கள் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டும் என மத்திய கல்வி அமைச்சகம் தொடர்ந்து வலியுறுத்தி வருவதே ஆகும். குறிப்பாக மும்மொழிக் கொள்கையை கட்டாயமாக்குவது குறித்து தமிழக அரசு தனது எதிர்ப்பினை தொடர்ந்து தெரிவித்து வருகிறது. தமிழ்நாடு பாரம்பரியமாக இருமொழிக் கொள்கையினை (தமிழ் மற்றும் ஆங்கிலம்) பின்பற்றி வருகின்றது.

இது மாநிலத்தின் மொழி மற்றும் கலாச்சார அடையாளத்தைப் பாதுகாக்கும் அதே வேளையில், மாணவர்கள் உலகளாவிய மொழிகளில் தேர்ச்சி பெறுவதை உறுதி செய்வதை நோக்கமாக கொண்டுள்ளது.எனவே, 43,94,906 மாணவர்களின் எதிர்காலத்தினை கருத்தில் கொண்டு, பிஎம் ஸ்ரீ திட்டப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதை வலியுறுத்தாமல், சமக்ர சிக்ஷா திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டக் கூறுகளுக்கு மத்திய அரசின் நிதியை உடனடியாக விடுவிக்க பிரதமர் நேரடியாகத் தலையிட்டு நிதியினை உடனடியாக வழங்கிட வேண்டும்.

› பட்டியல் மற்றும் பழங்குடியினர் சாதி பட்டியலில் 'ழி' மற்றும் 'கி' என முடிவடையும் பெயர்களை 'ஸி'என மாற்றக் கோருதல்: தமிழகத்தின் மக்கள் தொகையில் கிட்டத்தட்ட ஐந்தில் ஒரு பங்காக பட்டியல் மற்றும் பழங்குடியினர் மக்கள் உள்ளனர், தமிழ்நாட்டின் சாதிப் பெயர் பட்டியலில் 76 ஆதிதிராவிடர் சாதிப் பெயர்களும், 37 வகையான பழங்குடியினர் சாதிப் பெயர்களும், அறிவிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூகங்களை சேர்ந்த பெரும்பான்மையான மக்கள் தங்கள் சாதிப் பெயரில் இறுதி எழுத்து 'N' மற்றும் 'A' என முடிவதால், சாதிப் பெயரை ஒருமையுடன் குறிப்பிடுவதாக இருப்பதாகவும் எனவே சமூகத்தில் உரித்த பெருமை கிடைக்கப் பெறவில்லை என கூறி 'N' மற்றும் 'A' என்பதற்குப் பதிலாக 'R' என பெயர் மாற்றம் செய்து தங்களுக்கு உரிய மரியாதையைப் பெற்றுத் தருமாறு அரசிடம் கோரிக்கை வைத்தவண்ணம் உள்ளனர்.

தமிழக அரசு மேற்காணும் சாதிகளில் உரிய பெயர் மாற்றம் செய்ய சட்டமியற்றுமாறு இந்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது. எனவே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பட்டியலில் உள்ள சாதிப் பெயரில் இறுதி எழுத்தில் முடிவடையும் 'ழி' மற்றும் 'கி' என்பதற்குப் பதிலாக 'ஸி' என பெயர் மாற்றம் செய்து மக்களுக்கு உரிய மரியாதையை கிடைக்க வழி செய்யும் வண்ணம் உரிய சட்டம் இயற்ற, விரைவில் நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது.

› ஆதிதிராவிடர் பட்டியலில் கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர்களை சேர்த்தல்: அரசியலமைப்பு ஆணை, 1950 அரசியலமைப்பு மாற்ற ஆணை, 1956 மற்றும் அரசியலமைப்பு ஆணை திருத்தச் சட்டம், 1990 ன்படி, இந்து அல்லது சீக்கிய அல்லது பவுத்த மதத்திலிருந்து வேறுபட்ட மதத்தைச் சேர்ந்த எந்தவொரு நபரும் ஆதிதிராவிடர் சாதியைச் சேர்ந்தவர்களாகக் கருதப்பட மாட்டார்கள்.ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கும் சலுகைகளை கிறித்துவ மதம் மாறியவர்களுக்கும் விரிவுபடுத்துவதன் மூலம் சமூக நீதியை நிலைநிறுத்துவதற்காக 19.04.2023 அன்று தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

இந்திய அரசியலமைப்பின்கீழ் ஆதிதிராவிடர் சாதியினருக்கு வழங்கப்படும் சட்டப்பூர்வ பாதுகாப்பு, உரிமைகள் மற்றும் இடஒதுக்கீடு உள்ளிட்ட சலுகைகளை விரிவுபடுத்துவதற்கும், கிறித்துவ மதத்துக்கு மாறிய ஆதிதிராவிடர் சாதியினருக்கும், அனைத்து நிலைகளிலும் சமூக நீதியின் நன்மைகளைப் பெறுவதற்கும் அரசியலமைப்பில் திருத்தங்களைச் செய்வதற்குத் தேவையான சட்டத்தை இயற்ற வேண்டும்.

› இந்திய மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், கைது செய்யப்பட்ட மீனவர்கள் மற்றும் அவர்களின் படகுகளை விரைவாக விடுவிக்கவும் நிரந்தரத் தீர்வு காணுதல்: அண்மைக் காலமாக, இலங்கை அதிகாரிகளால் இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுவதும், அவர்களின் படகுகள் மற்றும் மீன்பிடி உபகரணங்களை பறிமுதல் செய்வதும் தொடர்கதையாகி வருகிறது. இந்த தொடர்ச்சியான கைதுகள் மாநிலத்தில் உள்ள ஏழை மீனவ குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மோசமாக பாதித்துள்ளது.

கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் மற்றும் அவர்களின் மீன்பிடி படகுகளை விடுவிப்பது தொடர்பாக, இந்திய அரசின் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சருக்கு, பல கடிதங்களை எழுதியுள்ளேன். ராஜதந்திர வழிமுறைகளில் பலமுறை முயற்சிகள் எடுக்கப்பட்ட போதிலும், இலங்கையால், இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுவது தொடர்கிறது. இது மீனவர் சமூகத்தினரிடையே கடுமையான கொந்தளிப்பை ஏற்படுத்துகிறது. இப்பிரச்சனைக்கு பிரதமரின் தனிப்பட்ட தலையீடு மூலம் நிரந்தர தீர்வு காண வேண்டும் என்று முதல்வர் ஸ்டாலின் கேட்டுக்கொண்டுள்ளார்.

## கொடைக்கானலில் 62வது மலர் கண்காட்சி தொடக்கம்: கண்டு ரசித்த சுற்றுலா பயணிகள்

கொடைக்கானல்: மே.25-



கொடைக்கானல் பிரையண்ட் பூங்காவில் 62வது மலர் கண்காட்சி மற்றும் கோடை விழா சனிக்கிழமை (மே 24) காலை தொடங்கியது. இதில், ஒரு லட்சம் கார்னேஷன் மலர்களால் வடிவமைக்கப்பட்ட திண்டுக்கல் பூட்டு, மலைப்பூண்டு, ஆயக்குடி கொய்யா, அணில் ஆகியவை சுற்றுலாப் பயணிகளை வெகுவாக கவர்ந்தன.

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் கோடை சீசனில் மாவட்ட நிர்வாகம், சுற்றுலாத்துறை மற்றும் வேளாண்மை உழவர் நலத்துறை சார்பில் மலர் கண்காட்சி மற்றும் கோடை விழா நடத்தப்படுகிறது. இந்த மலர் கண்காட்சியை காண வெளி மாவட்டங்கள், வெளி மாநிலங்கள் மட்டுமின்றி வெளிநாடுகளில் இருந்தும் அதிகளவில் சுற்றுலா பயணகள் வருகின்றனர்.

இந்தாண்டுக்கான 62 வது மலர் கண்காட்சி மற்றும் கோடை விழா சனிக்கிழமை (மே 24) காலை தொடங்கியது. மலர் கண்காட்சியையொட்டி நடவு செய்யப்பட்ட சால்வியா, பிங்க் அஸ்டர், டேலியா உட்பட 26 வகையான 2 லட்சம் மலர்ச் செடிகள் பூத்துக் குலுங்கின.

கண்காட்சியின் சிறப்பு அம்சமாக திண்டுக்கல் பூட்டு, கொடைக்கானல் மலைப்பூண்டு, ஆயக்குடி கொய்யா, பூனை, மயில் ஆகியவை ஒரு லட்சம் கார்னேஷன் மலர்களை கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளன. காய்கறி மற்றும் பழங்களால் உருவாக்கப்பட்ட யானை, பஞ்சவர்ணக்கிளி, மலை குருவி, பாண்டா கரடி ஆகியவை சுற்றுலா பயணிகளை வெகுவாக கவர்ந்தன.

சுற்றுலா பயணிகள் அவற்றை புகைப்படம் எடுத்து மகிழ்ந்தனர். தொடக்க விழாவையொட்டி, பள்ளி, கல்லூரி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நிகழ்ச்சியில் அமைச்சர்கள் யாரும் பங்கேற்கவில்லை. தொடக்க விழாவுக்காக சுற்றுலா பயணிகள் சிறிது நேரம் பூங்காவுக்குள் அனுமதிக்கப்படவில்லை. நிகழ்ச்சி தொடங்க தாமதமானதால் ஒரு மணி நேரம் காத்திருப்புக்கு பின் சுற்றுலா பயணிகள் அனுமதிக்கப்பட்டனர்.

கோடை விழாவையொட்டி, படகு போட்டி, படகு அலங்கார அணிவகுப்பு, மீன் பிடித்தல் போட்டி, நாய்கள் கண்காட்சி ஆகியவை நடைபெற உள்ளன. ஜூன் 1ம் தேதியுடன் மலர் கண்காட்சி மற்றும் கோடை விழா நிறைவு பெறுகிறது. மலர் கண்காட்சியையொட்டி பிரையண்ட் பூங்காவில் பார்வையாளர்களை அனுமதிக்கும் நேரம் இரவு 7 மணி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. அதே போல், 9 நாட்களுக்கு மட்டும் பிரையண்ட் பூங்கா நுழைவு கட்டணம் இரு மடங்காக அதிகரிக்கப்பட்டு உள்ளது.

## 137 பொறியியல் கல்லூரிகளுடன் தொழில்நுட்ப மையம் ஒப்பந்தம்: அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தகவல்

சென்னை, மே.25-



தமிழ்நாடு தொழில்நுட்ப மையம் 137 பொறியியல் கல்லூரிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது. இதன்மூலம், புத்தொழில் நிறுவன மேம்பாட்டுக்கான 'ஜிக்சா' தளத்தின் பயன்பாடு தமிழகத்தின் 2, 3ம் நிலை நகரங்களுக்கும் கிடைக்கும் என்று தகவல் தொழில்நுட்ப துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தமிழக தகவல் தொழில்நுட்ப துறை சார்பில் கடந்த ஆண்டு நடத்தப்பட்ட 'உமாஜின் 2024' மாநாட்டில், தமிழ்நாடு தொழில்நுட்ப மையம் (ஐடிஎன்டிஹப்) உருவாக்கிய 'ஜிக்சா' எனும் தளத்தை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார். கல்வி நிறுவனங்கள், தொழில் துறை, தொழில் முனைவோர், முதலீட்டாளர்கள், மாணவர்களை ஒருங்கிணைத்து, தமிழகத்தில் ஆழ்தொழில்நுட்பங்களுக்கான (டீப்டெக்) வளர்ச்சியை மேம்படுத்தும் நோக்கில் இந்த தளம் முன்னெடுக்கப்பட்டது.

அதன்படி, தொழில் துறையிலும், அரசு நிர்வாகத்திலும் உள்ள சிக்கல்கள் குறித்த அறிக்கைகளை பெற்று, புத்தொழில் நிறுவனங்கள், ஆராய்ச்சியாளர்கள், மாணவர்களை கொண்டு தீர்வு காண்பது, தரவுகளை பகுப்பாய்வு செய்து தேவையான முன்மொழிவுகளை வழங்குவது, புத்தொழில் நிறுவனங்களை முதலீட்டாளர்களுடன் சந்திக்க செய்வது, புத்தொழில் நிறுவனங்களின் தயாரிப்புகளை காட்சிப்படுத்துவது உள்ளிட்ட செயல்பாடுகள் ஜிக்சா தளம் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.

ஜிக்சா தளத்தில் இதுவரை 137 கல்வி நிறுவனங்கள், 303 புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் 6,065 ஆராய்ச்சியாளர்கள் பதிவு செய்துள்ளனர். இந்த தளம் மூலம் 43 தொழில் துறை நிறுவனர்கள், 69 முதலீட்டாளர்கள், 42 தொழில் துறை வழிகாட்டிகள் புத்தாக்க நிறுவனங்களுக்கு வழிகாட்டி வருகின்றனர்.

இதற்கிடையே, 137 பொறியியல் கல்லூரிகளுடன் தமிழ்நாடு தொழில்நுட்ப மையம் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டது. அதன்மூலம் ஜிக்சாவின் பயன்பாடு சென்னையை தாண்டி திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம், வேலூர், கிருஷ்ணகிரி, சேலம், நாமக்கல், ஈரோடு, கோவை, திருப்பூர், கடலூர், பெரம்பலூர், திருச்சி, திருவாரூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர், புதுக்கோட்டை, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், ராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய 2, 3ம் நிலை நகரங்களுக்கும் விரிவடைய செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.






■ நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் பாச்சல், பாவை மகளிர் கலை மற்றும் அறிவியல் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ஒன்றிய மற்றும் மாநில அரசு போட்டித்தேர்வுகளில் வெல்வது எப்படி? என்பதை குறித்த ஆலோசனை முகாம் நடைபெற்றது

# சொத்து வரி உயர்வுக்கு அதிமுக அரசு போட்ட கையெழுத்தே காரணம்: இபிஎஸ்ஸுக்கு அமைச்சர் கே.என்.நேரு பதில்





சென்னை: மே.25-

சொத்து வரி உயர்வைக் கண்டிக்கிற அதிமுக, அதனைக் கட்டாயப்படுத்திய மத்திய அரசோடு கூட்டணியில் இருந்தபோது அதனை மக்களிடம் மறைத்தது ஏன்? உள்ளாட்சிகளின் வளர்ச்சிக்கு நிதி வேண்டும் என்றால் வரியை உயர்த்தியே ஆக வேண்டும் என்று எடப்பாடி அரசு போட்ட கையெழுத்தால் கட்டாயப்படுத்துகிறது மத்திய அரசு, என்று எடப்பாடி பழனிசாமிக்கு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு பதிலளித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: "ஓலைக் குடிசைகள், ஓட்டு வீடுகளுக்குக் கூட பல மடங்கு சொத்து வரி உயர்த்தப்பட்டுள்ளது" என வழக்கம் போலவே 'பச்சைப் பொய்' பழனிசாமி பொய்களைச் சொல்லியிருக்கிறார்.

எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி விடும் அறிக்கைகள் ஒவ்வொன்றும் அவருக்கே பாதகமாக முடிகிறது. அதில், இன்றைய வரவு சொத்து வரி உயர்த்தப்பட்டதாக வெளியாகியிருக்கும் அறிக்கை.'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' என்பதைச் சற்று உணராமல் மத்திய பாஜக அரசு கைநீட்டிய இடங்களில் எல்லாம் அதிமுக ஆட்சியில் இருந்த போது எடப்பாடி பழனிச்சாமி கையெழுத்திட்டதன் விளைவால்தான் நாம் மத்திய அரசின் பிடிகளில் சிக்கித் தவிக்கிறோம்.

மத்திய அரசால் அமைக்கப்பட்ட 15ஆவது நிதி ஆணையம் தனது அறிக்கையில், 'மொத்த மாநில உற்பத்தி வளர்ச்சிக்கு (நிஷிஞிறி) நிகராக நகர்ப்புறச் சொத்துக்களின் வரிகளை உயர்த்த வேண்டும். நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியங்களை பெற வேண்டுமெனில் சொத்துவரியை உயர்த்த வேண்டும். ஒவ்வொரு ஆண்டும் இலக்கு நிர்ணயித்து சொத்துவரி வசூலில் வளர்ச்சியைக் காட்ட வேண்டும்' என்று சொன்னது.

'சமீபத்திய 5 ஆண்டுகளின் மாநில மொத்த உற்பத்தியைக் கணக்கிட்டு ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சி விகிதத்தில் சொத்துவரி வசூலிக்க வேண்டும். அப்படி வசூலித்தால் மட்டுமே உள்ளாட்சி அமைப்புகளுக்கான மானியங்கள் விடுவிக்கப்படும்' என்ற நிபந்தனையை 15ஆவது நிதிக்குழு விதித்தது.

ஒருவேளை தமிழக அரசு இதை கடைப்பிடிக்காத பட்சத்தில், உள்ளாட்சி அமைப்புகளுக்கு 202126 வரை நமக்குக் கொடுக்கப்பட வேண்டிய மத்திய அரசின் மானியம் ரூ.4,36,361 கோடி நிறுத்தி வைக்கப்படும். அதோடு தூய்மை இந்தியா திட்டம் , அம்ரூட் 2.0 திட்டம் ஆகியவற்றிற்கான நிதியும் ஒதுக்கப்படாது. மோடி அரசு இப்படிக் கடுமையான விதிகளை 15 ஆவது நிதியாணையத்தின் மூலம் விதித்த போது தங்களுடைய சுயநலத்துக்காக மத்திய அரசுக்குக் கட்டுப்பட்டுக் கையெழுத்திட்டவர்தான் அன்றைக்கு ஆட்சியில் இருந்த எடப்பாடி பழனிசாமி. அதனால்தான், ஒவ்வொரு ஆண்டும் சொத்து வரி உயர்வு என்பது நடைமுறைக்கு வந்தது.

உள்ளாட்சி அமைப்புகளை ஊழல் செய்வதற்காக மட்டுமே பயன்படுத்திக் கொண்ட எடப்பாடி பழனிசாமி அதன் மூலம் ஒவ்வொரு சாமானிய மக்களின் மீதும் தலையில் இடியை இறக்கினார். உள்ளாட்சித் தேர்தலை நடத்தாமல் இழுத்தடித்தார். அதன் மூலம் உள்ளாட்சி பிரதிநிதிகள் இல்லாமல் எந்தத் தடையுமின்றி அந்த உள்ளாட்சி அமைப்புகளில் நேரடியாகப் பல்லாயிரம் கோடி ஊழல்களையும் முறைகேட்டையும் செய்து கல்லா கட்டியவர்தான் அந்தத் துறைக்கு அமைச்சராக இருந்த எஸ்.பி.வேலுமணி. அதற்குத் துணை போனவர்தான் அன்றை முதல்வர் எடப்பாடி பழனிசாமி.

திராவிட மாடல் ஆட்சி அமைந்த சில மாதங்களிலேயே அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் தேர்தலை நடத்தியது. அதன் மூலம் உள்ளாட்சி அமைப்புகளை ஒழுங்குபடுத்தி கிராம சபைக் கூட்டங்கள் மூலம் ஜனநாயகத்தை நிலைநாட்டியவர் முதல்வர் மு.க.ஸ்டாலின். எடப்பாடி பழனிசாமி மோடி அரசின் அடிமையாகி கையெழுத்து போட்டதால், 15ஆவது நிதியாணையம் சொத்து வரி உயர்வைக் கட்டாயமாக்கியது. அதனால், வேறுவழியின்றித் தமிழ்நாட்டில் சொத்து வரி உயர்த்தப்பட வேண்டி நிலைக்குத் தள்ளப்பட்டது.

ஏழைகள் பாதிக்காத வண்ணம் மிக மிகக் குறைந்த அளவு சொத்து வரியை விதிக்க முதல்வர் உத்தரவிட்டார். அதன்படி ஏழை, நடுத்தர மக்கள் அதிகம் பாதிக்காத வகையில் குடியிருப்புகளின் பரப்பளவை 4 வகைகளாகப் பிரித்து வரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. பிற மாநிலங்களை ஒப்பிடும் போது தமிழ்நாட்டில் சொத்து வரி மிக மிகக் குறைவாகவே விதிக்கப்பட்டு வருகிறது. முந்தைய அதிமுக ஆட்சியில் 30 சதவிகிதம் வரை சொத்து வரி உயர்த்தப்பட்டதால்தான் சில நூறு ரூபாய் மட்டும் வரியாகக் கட்டி வந்த மக்கள் ஆயிரங்களில் கட்ட வேண்டிய நிலை ஏற்பட்டது.

வரி விதிக்கக் காரணமானவரே சொத்து வரி உயர்வைப் பற்றி ஒப்பாரி வைக்கிறார். அதையெல்லாம் மறந்துவிட்டு திராவிட மாடல் அரசின் மீது களங்கம் கற்பிக்க அவதூறுகளை அள்ளி வீசுகிறார் எடப்பாடி பழனிச்சாமி.மத்திய அரசு இப்படிக் கடுமையான விதிகளை 15 ஆவது நிதியாணையத்தின் மூலம் விதித்த போது அவர்களோடு நட்புறவில் இருந்தவர்தான் எடப்பாடி பழனிச்சாமி. தற்போது தமிழக அரசு தான் சொத்து வரி உயர்வுக்குக் காரணம் என்று சொல்வது தானும் தனது மத்திய பாஜக எஜமானர்களும் சேர்ந்து செய்த துரோகத்தை மூடி மறைக்க மட்டுமே.

பொய்யைத் திரும்பத் திரும்பச் சொன்னால், இறுதியில் மக்கள் நம்பிவிடுவார்கள் என்ற கோயபல்ஸ் கோட்பாடு போல, பழனிசாமி சளைக்காமல் திரும்பத் திரும்ப ஒரே பொய்யைப் பேசி அதை உண்மையாக்க முயல்வதில் கோயபல்ஸ்ஸையே ஓவர் டேக் செய்து, வாழும் கோயபல்ஸ் ஆக மாறியிருக்கிறார். சொத்துவரி உயர்வுக்குக் காரணம் திமுக அரசுதான் என்ற பொய்யை இன்னும் எத்தனை காலம் பேசிக்கொண்டிருக்கக் போகிறீர்கள் பழனிசாமி. அதிமுக ஆட்சியில் 2018ம் ஆண்டு குடியிருப்புகள் மற்றும் வணிக வளாகங்களுக்கான சொத்து வரியைத் தமிழ்நாடு முழுவதும் 50 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை உயர்த்தப்பட்டது.

15 மாநகராட்சிகள், 121 நகராட்சிகள், 528 பேரூராட்சிகளில் சொத்துவரி 1.4.2018 முதல் அமல்படுத்தப்பட்டது. அதற்குக் கடுமையான எதிர்ப்புகள் கிளம்பின. ஆனாலும் மக்களிடம் இருந்து உயர்த்தப்பட்ட சொத்து வரியை வசூலித்தார்கள். 2019 நவம்பரில் பேட்டி அளித்த அன்றைய உள்ளாட்சித் துறை அமைச்சர் வேலுமணி, "சொத்து வரி உயர்வு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது" எனச் சொன்னார். 'தற்காலிகம்' என்றால் அந்தச் சொத்து வரி உயர்வை ரத்து செய்ய முடியாது என்று அர்த்தம். அவர்களே அன்றைக்கு அப்படிச் சொல்லிவிட்டு, இன்றைக்குச் சொத்து வரி உயர்வுக்காக நீலிக் கண்ணீர் வடிக்கிறார் பழனிசாமி.

2018 ஜூனில் சட்டசபை கூட்டத்தொடரில், அன்றைய உள்ளாட்சித் துறை அமைச்சர் வேலுமணி 1919ம் ஆண்டு சென்னை மாநகராட்சி சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவதற்கான மசோதாவைத் தாக்கல் செய்தார். அதில், 'உரிய காலத்திற்குள் சொத்துவரியைக் கட்டத் தவறுபவர்களுக்கு, வட்டி விதிக்கும் நடைமுறை தற்போது இல்லை. 4ஆவது மாநில நிதி ஆணையம், சொத்து வரியைக் காலம் தாழ்த்திச் செலுத்துவோருக்கு, வட்டி விதிப்பதற்கான அவசியம் குறித்து ஆய்வு செய்யுமாறு, அரசுக்குப் பரிந்துரை செய்தது. அந்தப் பரிந்துரைகளை ஆய்வு செய்த அரசு, அதை ஏற்பது என முடிவு செய்துள்ளது' என்று வேலுமணி கூறினார். அன்றைக்கு மாநில நிதி ஆணையம் சொன்னதை ஏற்றுக் கொண்ட அதிமுகதான், இன்றைக்குச் சொத்து வரி உயர்வுக்கு ஓலம் இடுகிறது.

சொத்து வரி உயர்வைக் கண்டிக்கிற அதிமுக, அதனைக் கட்டாயப்படுத்திய மத்திய அரசோடு கூட்டணியில் இருந்தபோது அதனை மக்களிடம் மறைத்தது ஏன்? உள்ளாட்சிகளின் வளர்ச்சிக்கு நிதி வேண்டும் என்றால் வரியை உயர்த்தியே ஆக வேண்டும் என்று எடப்பாடி அரசு போட்ட கையெழுத்தால் கட்டாயப்படுத்துகிறது மத்திய அரசு.

வரியை உயர்த்த உண்மையான காரணத்தை மு.க.ஸ்டாலின் அரசு சொன்னால் திசை திருப்பும் வகையில் பொய் அறிக்கை வெளியிடுகிறது அதிமுக. ஆட்சியில் இருந்த போது ஆதரித்து கையெழுத்து போட்டுவிட்டு, இப்போது சொத்துவரி உயர்வை எதிர்க்கிறது. அம்பி, ரெமோ என இரட்டை வேடம் போட்டு அந்நியன் படத்தில் வரும் வசனம் போல 'பின்றியே' என்றுதான் பழனிசாமியை சொல்லத் தோன்றுகிறது, என்று அவர் கூறியுள்ளார்.

---

## சிவகங்கை முத்துப்பட்டியிலுள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் 2025ஆம் ஆண்டிற்கான மாணவர் சேர்க்கைக்கு மாணவர்கள் ஜூன் 13 வரை இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம்

### மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித் தகவல்



சிவகங்கை, மே.25-

சிவகங்கை மாவட்டம், முத்துப்பட்டியிலுள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் 2025ஆம் ஆண்டிற்கான மாணவர் சேர்க்கை 19.05.2025 முதல் தொடங்கப்பட்டுள்ளது. சிவகங்கை அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் ஏற்கனவே உள்ள எலக்ட்ரீசியன், பிட்டர், கணினி இயக்குபவர் (கோபா), வெல்டர் ஆகிய தொழிற்பிரிவுகளுடன் நவீன தொழில் நுட்பத்திற்கு ஏற்ப புதிதாக தொடங்கப்பட்டுள்ள மெக்கானிக் மின்சார வாகனம், அட்வான்ஸ்டு CNC மெசினிங் டெக்னீசியன், இன்டஸ்ட்ரியல் ரோபோடிக்ஸ் - டிஜிட்டல் மேனு பேக்சரிங் டெக்னீசியன் ஆகிய தொழிற்பிரிவுகளுக்கும் மாணவர்கள் சேர்க்கை தொடங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட தொழிற்பிரிவுகளில் வெல்டர் தொழிற்பிரிவு தவிர மற்ற தொழிற்பிரிவுகளில் சேர மாணவர்கள் கட்டாயம் SSLC (10ஆம் வகுப்பு) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

8ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்கள் பற்ற வைப்பவர் (WELTER) தொழிற்பிரிவில் சேர விண்ணப்பிக்கலாம்.

மேலும், அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் 2025 ஆம் ஆண்டிற்கான மாணவர் சேர்க்கைக்கு மாணவர்கள் தற்சமயம் முதல் வருகின்ற 13.06.2025 வரை மாணவர்கள் www.skilltraining.tn.gov.in என்ற இணையதள முகவரியின் வாயிலாக Online மூலம் விண்ணப்பிக்கலாம். இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்க இயலாதவர்கள் "தொழிற்பயிற்சி நிலைய சேர்க்கை உதவி மையமான" சிவகங்கை அரசு தொழிற்பயிற்சி நிலையத்திற்கு நேரில் வந்து மாணவர்கள், இலவசமாக Online மூலம் விண்ணப்பிக்கலாம். அவ்வாறு விண்ணப்பிக்க வரும்போது தங்களது நிரந்தர தொலைபேசி எண், மதிப்பெண் சான்றிதழ் (10th/8th), சாதிசான்றிதழ், மாற்றுசான்றிதழ், முன்னுரிமை சான்றிதழ் (முன்னுரிமைகோரும் நேர்வில்), பாஸ்போர்ட் அளவு புகைப்படம் மற்றும் மின்னஞ்சல் முகவரி ஆகியவற்றை உடன் கொண்டு வரும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும், விண்ணப்பதாரர்கள் விண்ணப்ப கட்டணமாக ரூ.50/ஐ இணையதளம் வழியாக செலுத்தும் வகையில் Debit Card/ Credit Card உடன் கொண்டுவரவேண்டும்.

அதுமட்டுமன்றி, பயிற்சியின் போது பயிற்சியாளர்களுக்கு அரசால் வழங்கப்படும் உதவித்தொகை மாதம் ரூ.750/ இலவச பாடப்புத்தகங்கள், மிதிவண்டி, சீருடைகள், காலணிகள், இலவச பஸ்பாஸ், ஆகியவை பெற்று வழங்கப்படும். மேலும், புதுமைப்பெண் மற்றும் தமிழ் புதல்வன், திட்டங்களின்கீழ் தகுதி வாய்ந்த பயிற்சியாளர்களுக்கு ரூ.1,000/ பெற்று வழங்க வழிவகை செய்யப்படும். பயிற்சியின் போது பிரபல தொழில் நிறுவனங்களில் பயிற்சியும், பயிற்சி காலம் முடிவுற்றவுடன் பிரபல நிறுவனங்களில் வேலை வாய்ப்பும் ஏற்பாடு செய்து தரப்படும். எனவே, ITI பயிற்சியில் சேர்ந்து கொள்ளலாம்.

மேலும், சேர்க்கை தொடர்பான விவரங்களுக்கு 9943610476, 9965480973, 9597795560, 9944887754, 9489476847, 6385475657, 9942099481, 9363343015, 9791360290 ஆகிய அலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் ஆஷா அஜித்,இ.ஆ.ப., தெரிவித்துள்ளார்.

---

## தென்காசி மாவட்டத்திற்கு இந்திய வானிலை ஆய்வு மையத்தால் (24.05.2025) அன்று மஞ்சள் எச்சரிக்கையும் (Yellow Alert) (25.05.2025) மற்றும் (26.05.2025) அன்று ஆரஞ்ச் எச்சரிக்கையும் (Orange Alert) விடுக்கப்பட்டுள்ளது மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல் கிஷோர் தகவல்



தென்காசி: மே.25-

தென்காசி மாவட்டத்திற்கு இந்திய வானிலை ஆய்வு மையத்தால் (24.05.2025) அன்று மஞ்சள் எச்சரிக்கையும் (Yellow Alert) (25.05.2025) மற்றும் (26.05.2025) அன்று ஆரஞ்ச் எச்சரிக்கையும் (Orange Alert) விடுக்கப்பட்டுள்ளது. எனவே நீர்நிலைகள் மற்றும் தாழ்வான பகுதிகளின் அருகில் வசிக்கும் பொது மக்கள், கீழ்கண்ட வழிமுறைகளைப் பின்பற்றி பாதுகாப்பாக இருக்குமாறு இதன் மூலம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

கனமழை காலங்களில், பொதுமக்கள் நீர்நிலைகள் மற்றும் ஆற்றில் குளிக்கச் செல்வதை முற்றிலும் தவிர்க்க வேண்டும். பொதுமக்கள் அனைவரும், இடி மின்னலுடன் கனமழை பெய்யும் போது, திறந்த வெளியில் நிற்பதையும், நீர்நிலைகளில் குளிப்பதையும், மரங்கள் மற்றும் உலோக கட்டமைப்புகளின் கீழ் நிற்பதையும் முற்றிலும் தவிர்க்க வேண்டும். மழை / வெள்ளநீர் தேங்கும் இடங்களில் கால்நடைகளை கட்டிவைக்க கூடாது. வெள்ளப் பெருக்கு ஏற்படுவதற்கு முன்னர் கால்நடைகளை பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்ல வேண்டும்.

வெள்ளப்பெருக்கு ஏற்படும் சமயங்களில் தாழ்வான பகுதிகளிலும், நீர்நிலைகளின் இரு கரைகளிலும் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல வேண்டும். பொதுமக்கள் தங்களது ஆதார் / குடும்ப அட்டை உள்ளிட்ட முக்கியமான ஆவணங்களை நெகிழி உறைகளில் வைத்து பத்திரப்படுத்திக்கொள்ள வேண்டும். பேரிடர் காலங்களில், பொதுமக்கள் டார்ச்லைட், மருந்துகள் போன்ற அத்தியாவசிய பொருட்களை வைத்திருக்க வேண்டியது அவசியம் ஆகும்.

மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில், பேரிடர் கால நடவடிக்கைகள் மேற்கொள்ள, 24 மணி நேரமும் செயல்படும் வகையில் அவசர கால கட்டுப்பாட்டு அறை செயல்பட்டு வருகிறது. பொதுமக்கள் கட்டணமில்லா தொலைபேசி எண். 1077 மற்றும் 04633 ஹ 290548 என்ற தொலைபேசி எண்களை தொடர்பு கொண்டு, மழை, வெள்ளம் மற்றும் பேரிடர்கள் குறித்து தகவல் தெரிவிக்கலாம்.

பொதுமக்களிடமிருந்து பெறப்படும் புகார்கள் சம்பந்தப்பட்ட துறைக்கு தெரிவிக்கப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் .ஏ.கே. கமல்கிஷோர், இ.ஆ.ப., தெரிவித்துள்ளார்.

---

## 'கட்டாய கல்வி உரிமைச் சட்டத்தின் கீழ் மாணவர் சேர்க்கையை முடக்க மத்திய அரசு முயற்சி' வைகோ கண்டனம்

சென்னை: மே.25-

கட்டாய கல்வி உரிமை சட்டத்தின் கீழ் பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கைக்கு நிதியை உடனடியாக ஒன்றிய அரசு விடுவிக்க வேண்டும் என மதிமுக பொதுச்செயலாளர் வைகோ கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், "கட்டாயக் கல்வி உரிமை சட்டத்தின்படி தனியார் பள்ளிகளில் சமூக மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள ஏழை மாணவர்களுக்கான 25 சதவீத இடஒதுக்கீட்டின்படி இந்த ஆண்டுக்கான மாணவர் சேர்க்கை இதுவரை தொடங்கப்படவில்லை எனக்கூறி, சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு நீதிபதிகள் ஜி.ஆர்.சுவாமிநாதன், வி.லட்சுமி நாராயணன் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது.

வழக்கு விசாரணையில், தமிழ்நாடு அரசு சார்பில் வாதிடுகையில், இத்திட்டத்தில், மாணவர்களின் கல்விக் கட்டணத்தில் ஒன்றிய அரசின் பங்கு 60 சதவீதம் மற்றும் மாநில அரசின் பங்கு 40 சதவீதம். ஆனால், ஒன்றிய அரசு கடந்த 2021 முதல் கல்வி நிதியை வழங்காமல் இருப்பதாக தமிழ்நாடு அரசு சார்பில் வாதிடப்பட்டது.

அப்போது, கட்டாயக் கல்வி உரிமை சட்டத்தின்கீழ் 25 சதவீத இடஒதுக்கீட்டு இடங்களுக்காக தமிழகத்துக்கு ஒதுக்கப்பட வேண்டிய நிதி விவரங்களை சமர்ப்பிக்கும்படி ஒன்றிய அரசுக்கு நீதிபதிகள் உத்தரவிட்டிருந்தனர்.

இந்நிலையில், இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, ஒன்றிய அரசு தரப்பில் ஆஜரான கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ஏ.ஆர்.எல்.சுந்தரேசன், "புதிய கல்விக் கொள்கை உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பான ஒன்றிய அரசின் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திடாத காரணத்தால் கட்டாயக் கல்வி சட்டத்தின்கீழ் 25 சதவீத இடஒதுக்கீட்டுக்கான ஒன்றிய அரசின் பங்களிப்பு தொகை ஒதுக்கப்படவில்லை. பல்வேறு மாநிலங்கள் இதுதொடர்பான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள நிலையில் தமிழக அரசு மட்டும் கையெழுத்திடவில்லை" என்றார்.

மும்மொழிக் கொள்கையை ஏற்றால்தான் சமக்ர சிக்ஷா திட்டத்தின் கீழ் கல்வி நிதியை வழங்க முடியும் என்று கூறி தமிழ்நாட்டுக்கு தர வேண்டிய ரூ.2,291 கோடி நிதியை ஒன்றிய அரசு தர மறுக்கிறது. இது தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ள தமிழ்நாடு அரசு, கல்வி நிதியை உடனடியாக விடுவிக்க ஒன்றிய அரசுக்கு உத்தரவிட வேண்டும் என்று கோரியுள்ளது.

புதிய கல்விக் கொள்கையை ஏற்காத, "பி.எம். ஸ்ரீ' பள்ளி திட்டத்தை செயல்படுத்தாத மாநிலங்களுக்கான நிதி நிறுத்தப்படுவதை ஏற்க முடியாது. உடனடியாக தமிழ்நாடு, கேரளா, மேற்கு வங்கத்துக்கான நிறுத்தி வைக்கப்பட்ட நிதியை விடுவிக்க வேண்டும்" என, நாடாளுமன்ற நிலைக்குழு திட்டவட்டமாக தெரிவித்திருந்தது. ஆனால் ஒன்றிய அரசு தற்போது வரையில் தமிழ்நாட்டுக்கான கல்வி நிதியை ஒதுக்கீடு செய்யாமால் காலம் தாழ்த்தி ஒருதலை பட்சமாக செயல்பட்டு வருவது கண்டனத்துக்குரியது.

இத்திட்டத்தின் மூலம் தமிழகத்தில் 7,738 தனியார் பள்ளிகளில் சுமார் 85 ஆயிரம் முதல் ஒரு லட்சத்திற்கும் அதிகமான மாணவ, மாணவிகள் வரை பயன்பெற்று வந்தனர். இத்திட்டம் தொடங்கி 14 ஆண்டுகளாக செயல்பட்டு வரும் நிலையில், வருடந்தோறும் ஏப்ரல் மாதம் தொடங்கி மே மாதம் வரை காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டு விண்ணப்பங்கள் பெறப்பட்டு தகுதியான மாணவர்களுக்கு 25 சதவீத இட ஒதுக்கீட்டின் கீழ் சேர்க்கை நடைபெறும்.

ஆனால், இந்தாண்டு தமிழகத்தில் ஏப்ரல் மாதம் வெளியிடப்பட வேண்டிய கட்டாய கல்வி உரிமை சட்டத்தின் கீழ் மாணவர் சேர்க்கைக்கான அறிவிப்பு தற்போது வரை வெளியிடப்படவில்லை. ஒன்றிய அரசின் புதிய கல்விக் கொள்கையை ஏற்காததால், சமக்ர சிக்ஷா அபியான் திட்டத்தின் கீழ் தமிழகத்திற்கு தர வேண்டிய 2,291 கோடி ரூபாய் கல்வி நிதியை ஒன்றிய அரசு நிறுத்தி வைத்திருப்பது இந்த தாமதத்திற்கு காரணம் ஆகும்.

கல்வித்துறையில் தமிழகம் முன்னோடி மாநிலமாக இருந்து வருகிறது. இச்சூழலில் தமிழகத்தில் கட்டாய கல்வி உரிமை சட்டம் 2009 ஐ முடக்கி வைக்கும் வகையில் இத்திட்டத்திற்காக ஒன்றிய அரசு வழங்க வேண்டிய 617 கோடி ரூபாயை விடுவிக்காமல் அடாவடியாக ஒன்றிய அரசு செயல்படுவது கடும் கண்டனத்துக்குரியது. உடனடியாக கட்டாய கல்வி உரிமை சட்டத்தின் கீழ் பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கைக்கு நிதியை ஒன்றிய அரசு விடுவிக்க வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார்.





# பழனியில் டிஎஸ்பி தலைமையில் கஞ்சா விற்பனை செய்த ஏழு நபர்கள் கைது

திண்டுக்கல், மே.25-

திண்டுக்கல் மாவட்டம் பழனி வணிக வளாகம் அதிகம் உள்ள பகுதியான ஆர்எஃப் ரோட்டில் .காவல் ஆய்வாளர் மணிமாறன் சார்பாய்வாளர் விஜய் காவலர்கள் போலீசார் இன்று வழக்கமான ரோந்து பணி மேற்கொண்டனர். அப்போது சந்தேகத்துக்கு இடமாக நின்று கொண்டிருந்த நான்கு நபர்களும் மற்றும் புதிய தாராபுரம் ரோடு சண்முகா தியேட்டர் அருகே மூன்று நபர்களையும் பிடித்து போலீசார் விசாரணை செய்தனர். முன்னுக்குப் பின் முரணாக போலீசாரிடம் தகவல் தெரிவித்ததால் ஏழு பேரையும் போலீசார் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரணை செய்தனர். போலீசாரின் விசாரணையில். வீரமாத்தி அம்மன் கோயில் தெரு பால சமுத்திரத்தை சேர்ந்த கோகுல் கிருஷ்ணன். பழனி குபேரபட்டினம் ஆறுமுகம். அங்கமுத்து வீதி கார்த்திகேயன். முகமது ஷேக். தெற்கு அண்ணா நகரை சேர்ந்த நாகேந்திர பிரசாத். ஜவகர் நகர் சரவணகுமார். சத்யா நகர் முகமது சூர்யா. உள்ளிட்ட 7 பேரும் கஞ்சா விற்பனை செய்துவந்ததும், கல்லூரி மாணவர்களிடம் கஞ்சா விற்பனை செய்ய காத்திருந்ததும் தெரியவந்தது. அவர்களிடம் இருந்து 100 கிராம் கஞ்சா விற்பனைக்காக வைத்திருந்தது பறிமுதல் செய்யப்பட்டது. பிடிபட்ட ஏழு பேர் மீதும் வழக்கு பதிவு செய்த போலீசார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர்.



■ தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் 1,000 பயனாளிகளுக்கு கலைஞர் கனவு இல்லத் திட்டத்தின் கீழ் வீடுகட்டுவதற்கான ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வில் மாண்புமிகு இயற்கை வளங்கள் துறை அமைச்சர் .எஸ்.ரகுபதி, கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் . அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.எம்.அப்துல்லா, .துரை வைகோ, செல்வி.எஸ்.ஜோதிமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் மரு.வை.முத்துராஜா, எம்.சின்னத்துரை,. எஸ்.டி.ராமச்சந்திரன், தாட்கோ தலைவர் நா.இளையராஜா, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், இ.ஆ.ப., கூடுதல் செயலாளர் ஆர்.வி.ஷஜீவனா, இ.ஆ.ப., மாவட்ட ஆட்சித்தலைவர் .மு.அருணா, இ.ஆ.ப., காவல் கண்காணிப்பாளர் அபிஷேக் குப்தா, இ.கா.ப., புதுக்கோட்டை மாநகராட்சி மேயர் .திலகவதி செந்தில், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அப்தாப் ரசூல், இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் அ.கோ.ராஜராஜன் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



■ இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் ஊராட்சி ஒன்றியம், பிரப்பன்வலசை ஊராட்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன்,இ.ஆ.ப., , மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம் மற்றும் ஊராட்சி ஒன்றிய பொதுநிதி திட்டத்தின் கீழ் மகளிர் மன்ற கட்டிடம் கட்டப்பட்டு வருவதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



■ டெல்லி சாணக்யபுரியில் உள்ள வைகை தமிழ்நாடு இல்ல வளாகத்தில் புதிதாக கட்டப்பட்டு வரும் கட்டடங்களின் கட்டுமானப் பணிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆய்வு செய்தார்.உடன் தமிழக அமைச்சர்கள் உடனிருந்தனர்..

# "காபி வித் கலெக்டர்" கலந்துரையாடல் நிகழ்ச்சி மூலம் மாவட்ட ஆட்சித்தலைவர் ஜெயசீலன் மாணவர்களுடன் கலந்துரையாடல்




மதுரை மே.25-

விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் சிவகாசி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளிகளில் பத்தாம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் பள்ளிகள் அளவில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பள்ளி மாணவ, மாணவியர்களுடன் இரண்டு குழுக்களாக நடைபெற்ற 182 மற்றும் 183 ஆவது சிறப்பு காபி வித் கலெக்டர் நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன்,இ.ஆ.ப., அவர்கள் உயர்கல்வி வாய்ப்புகள், தலைசிறந்த கல்லூரிகள், உரிய பாடப்பிரிவுகளை தேர்ந்தெடுப்பது குறித்து மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

மேலும், இந்த கலந்துரையாடல் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பள்ளி மாணவ, மாணவிகளிடம், அவர்களுடைய இலட்சியம், அவர்களுக்கு எந்த துறையில் ஆர்வம் உள்ளது என்பது குறித்து கேட்டறிந்தார்.

பள்ளிப்படிப்பை முடித்து சிறந்த கல்லூரிகளில் பயின்று சமூகத்தில் நல்ல நிலையில் இருக்கக்கூடியவர்களின் புள்ளி விவரங்களை சற்று ஆராய்ந்து பார்த்தால், அது அதிக மதிப்பெண்கள் பெற்றவரோ, சராசரியாக படித்தவரோ என எந்தவொரு பொதுப்பண்புகளும் இல்லை. தங்களுக்கான வாய்ப்புகள் குறித்து முன்கூட்டியே சரியான நேரத்தில் விழிப்புணர்வும், அதற்கான முயற்சியும் எடுப்பவரே வெற்றியடைகிறார்கள்.

நல்ல மதிப்பெண்கள் எடுக்கும் மாணவர்களுக்கு இன்னும் அதிக விழிப்புணர்வு இருந்தால், அவர்கள் நல்ல முடிவு எடுப்பதற்கு உறுதுணையாக இருக்கும். மாணவர்களுக்கு தங்களுக்கான வாய்ப்புகள் என்னென்ன என்பது குறித்து அறிந்து இருக்கவேண்டும். இந்திய அளவில் பல்வேறு தலைசிறந்த உயர்கல்வி கல்லூரிகள் உள்ளன. அவற்றை பற்றி மாணவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அதில் உள்ள வாய்ப்புகளையும், அதற்கான நுழைவுத் தேர்வு, உதவித்தொகை, சலுகைகள் உள்ளிட்டவைகள் குறித்து தெரிந்துகொள்ளவேண்டும்.

ஒரு தெளிவான இலக்கை நிர்ணயிக்கும் போது, அதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கு நமக்கு எளிதாக இருக்கும். நீங்கள் இப்போது எங்கே இருக்கிறீர்கள். இதிலிருந்து உங்களுக்கான இலக்கை அடைவதற்கு என்ன தேவை என திட்டத்தை வகுத்துக் கொள்வது மிக அவசியம்.

11 மற்றும் 12 ஆம் வகுப்பு படிக்கின்ற போதே, உயர்கல்விக்கான இலக்கை நிர்ண யித்து, அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். எந்த கல்லூரியில் எவ்வளவு கட் ஆப் மதிப்பெண் அடிப்படையில் மாணவர் சேர்க்கை நடைபெற்றது போன்ற தகவல்களை தெரிந்துகொள்ள வேண்டும்.

பன்னிரெண்டாம் வகுப்பில் எடுக்க கூடிய மதிப்பெண்களை பயன்படுத்தி நமக்கான நல்ல வாயப்புகளை உருவாக்கி கொள்ள வேண்டும். உயர்கல்வி எங்கு பயின்றாலும், இந்தியாவில் சிறந்த கல்லூரியை தேர்ந்தெடுத்து படிக்க வேண்டும். வெற்றிக்கு தேவையான விஷயங்களை தொடர்ந்து ஆர்வத்துடன், கவனசிதறல் இல்லாமல், தொடர்ந்து விடா முயற்சியுடனும், கடினமாக உழைத்தால் எளிதாக வெற்றி பெறலாம்.

மேலும், மாணவர்கள் அனைவரும் தங்களுடைய ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் வழிகாட்டுதலோடு, நன்கு படித்து முன்னேற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன் தெரிவித்தார்.



■ திண்டுக்கல் மாவட்டம் பழனி கோயிலில் ரோப் காரில் தேசிய பேரிடர் மீட்பு குழுவினர் ஒத்திகை நிகழ்ச்சி நடைபெற்றது. ரோப்கார் அந்தரத்தில் பழுதாகி நிற்கும் போது பக்தர்களை மீட்பது எப்படி என்பது குறித்து ஒத்திகையை பேரிடர் மீட்பு குழுவினர் செய்து காண்பித்தனர்.

# திண்டுக்கல் போக்சோ வழக்கில் கைது செய்யப்பட்ட வாலிபருக்கு ஆயுள் தண்டனை

## 5 ஆண்டுகள் சிறை, ரூ.1,60,000 அபராதம்

திண்டுக்கல், மே.25-

திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் அருகே கூம்பூர் காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட பகுதியை சேர்ந்த 17 வயது சிறுமியை கடந்த 2023ம் ஆண்டு காதலித்து திருமணம் செய்து பாலியல் வன்கொடுமை செய்த வேடசந்தூர் S. புதூர் பகுதியை சேர்ந்த காளிமுத்து(25) என்பவரை கூம்பூர் காவல்துறையினர் போக்சோவில் கைது செய்து சிறையில் அடைத்தனர்.



இந்நிலையில் இவ்வழக்கு திண்டுக்கல் போக்சோ சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணையில் இருந்து வந்த நிலையில் வேடசந்தூர் ஆய்வாளர் வேலாயுதம் தலைமை யிலான காவல்துறையினர் மற்றும் அரசு வழக்கறிஞர் ஆகியோரின் சீரிய முயற்சியால் நேற்று நீதிபதி காளிமுத்துவிற்கு ஆயுள் தண்டனை உடன் கூடிய 5 ஆண்டுகள் சிறை தண்டனை, ரூ.1,60,000 அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கினார்..

# இரயிலில் மயக்கமடைந்த பெண் மருத்துவமனையில் அனுமதி

இராமநாதபுரம், மே.25-

இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி வரையில் பேருந்தில் பயணம் செய்து பின்பு பரமக்குடியில் இருந்து மதுரை வரை ரயில் பயணச்சீட்டு பெற்று வந்து மதுரை ரயில் நிலையத்தில் இறங்கி மதுரை ரயில் நிலையத்திலிருந்து விருதாச்சலம் ரயில் நிலையம் வருவதற்காக ரயில் பயணச்சீட்டு பெற்று ஒரு பெண் வந்துள்ளார் இவர். ரயில் வண்டியில் தொடர்ந்து பயணம் செய்து சென்னை சென்று பார்க்கும் போது இவர் மயக்க நிலையில் இருந்துள்ள நபரை ரயில் நிலைய நடைமேடையில் இறக்கி 108 ஆம்புலன்ஸ் மூலம் ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் தற்போது சிகிச்சை பெற்றுள்ளார் இவரிடம் எந்த முகவரியும் இல்லை இவரை பற்றி தகவல் தெரிந்தால் இந்த நம்பரை அழைத்து +919944885852,+919498176220 உடனடியாக தகவல் தெரிவிக்கவும்.





■ பால்வளத்துறை அமைச்சர் மனோ தங்கராஜ் , மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா, இ.ஆ.ப., தலைமையில் நாகர்கோவில் பொன்ஜெஸ்லி பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற மாபெரும் வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொண்டு பார்வையிட்டார்கள். உடன் தமிழ்நாடு மாநில உணவு ஆணையத்தலைவர்.என்.சுரேஷ் ராஜன் உட்பட பலர் உள்ளார்கள்.

# பெரம்பலூர் 5 கிராமங்கள் புகையிலை பயன்பாடற்ற கிராமங்களாக அறிவிப்பு

## ஆய்வு மேற்கொள்ள கலெக்டர் உத்தரவு

பெரம்பலூர், மே.25-

பெரம்பலூர் மாவட்டத்தில் சொக்கநாதபுரம், எம். புதூர், சாஸ்திரிபுரம், கே.புதூர், குரும்பாபாளையம் ஆகிய 5 கிராமங்களில் புகையிலை பயன்பாடு முற்றிலும் ஒழிக்கப்பட்டு புகையிலை பயன்பாடற்ற கிராமங்களாக அறிவிக்கப்பட்டுள்ளதாக ஆய்வுக் கூட்டத்தில் சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

பெரம்பலூர் மாவட்ட பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறையின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் பணிகளின் முன்னேற்ற நிலை குறித்து மாதாந்திர ஆய்வுக் கூட்டம் நேற்று மாலை மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு கலெக்டர் கிரேஸ் பச்சாவ் தலைமை வகித்தார்.

இக்கூட்டத்தில் புகையிலை, பான்மசாலா போன்ற தடை செய்யப்பட்ட பொருட்களின் பயன்பாட்டை தடுக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும், காசநோய்த் தடுப்பு குறித்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக் கைகள், பொது மக்களுக்கு வழங்கப்படும் குடிநீரின் தரம் குறித்து இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மற்றும் அதன் முடிவுகள் குறித்தும், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் கடந்த மூன்று மாதங்களில் எந்த வகையான நோய் பாதிப்பு அதிக அளவில் உள்ளது, அதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன என்பது குறித்தும், ஆரம்ப சுகாதார நிலையங்களில் மேற்கொள்ளப்பட்ட பிரசவங்கள் குறித்தும் மாவட்ட கலெக்டர் விரிவாக ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், பெரம்பலூர் மாவட்டத்தில் சொக்க நாதபுரம், எம்.புதூர், சாஸ்திரிபுரம், கே.புதூர், குரும்பாபாளையம் ஆகிய கிராமங்களில் புகையிலை பயன்பாடு முற்றிலும் ஒழிக்கப்பட்டு புகையிலை பயன்பாடற்ற கிராமங்களாக அறிவிக்கப்பட்டுள்ளதாக சுகாதாரத் துறையின் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

இதனைக் கேட்ட மாவட்டக் கலெக்டர் கிரேஸ் பச்சாவ் பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து பகுதிகளிலும் இந்த நிலை உருவாக்கப்படும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், அவ்வாறு அறிவிக்கப்பட்டு விட்டதால் அந்த கிராமங்களில் ஆய்வு செய்வதை நிறுத்தி விடாமல் தொடர் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் உத்தரவிட்டார்ஒவ்வொரு ஊராட்சியிலும் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் முறையான இடைவெளியில் சுத்தமாக கழுவப்படுகின்றதா என்பது குறித்த ஆய்வுகள் அவ்வப்போது மேற்கொள்ளப்பட வேண்டும்.

வாரத்திற்கு குறைந்தது 5 இடங்களிலாவது பொது மக்கள் குடிக்கப் பயன்படுத்தும் நீரின் தரம் குறித்து ஆய்வு செய்திட வேண்டும்.

மாதத்திற்கு 20 ஆய்வுகள் கண்டிப்பாக நடத்தப்பட்டு அதன் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்று தெரிவித்த மாவட்ட கலெக்டர், அயோடின் குறைபாடுடைய உப்புகள் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படுகிறதா என கடைகளிலும், உணவகங்களிலும் உணவுப் பாதுகாப்புத் துறையினரும், சுகாதாரத் துறையினரும் கூட்டாய்வு மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார்.

அயோடின் குறைபாட்டை தவிர்க்கும் வகையில் கடந்த ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம் வரை 5340 வீடுகளிலும், ஏப்ரல் முதல் தற்போது வரை 2880 வீடுகளிலும், குழந்தைகள் மையம், கடைகளிலும் அயோடின் உப்பு குறித்த ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டுள்ள தாகவும் சுகாதாரத் துறை சார்பில் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் மாவட்ட மருத்துவ நலப்பணிகள் இணை இயக்குனர் டாக்டர் மாரிமுத்து, மாவட்ட சுகாதார அலுவலர் டாக்டர் கீதா, மாவட்ட வழங்கல் அலுவலர் சுந்தர ராமன் மற்றும் அனைத்து அரசு ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர்கள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161